தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2022
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
The Tamil Competition 2022
The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

இணைப்பு: 18

## பேச்சுப்போட்டி - மேற்பிரிவு

(பிறந்த திகதி: 01.07.2010 - 30.06.2012)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## தன்னம்பிக்கையை வளர்ப்போம்!

"பாதகம் செய்பவரைக் கண்டால் நீ பயங்கொள்ளல் ஆகாது பாப்பா" என்கிறார் பாரதியார். தீங்கு செய்பவரைக் கண்டால் அஞ்சிவிடக் கூடாது என்றே இந்தப் பாப்பா பாடல் சொல்கின்றது. சிறுவர்களாகிய நாம் இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று நாம் வாழ்வது அவுஸ்திரேலியா எனும் பல்கலாசார நாட்டில்! இங்கு மொழி, கலாசாரம், மரபுகள் என்பவற்றால் வேறுபட்ட மக்கள் ஒன்றாய் இணைந்தே வாழ்கின்றோம். எமது கலாசாரமும், பழக்க வழக்கங்களும் மற்றவர்களுக்குப் புதுமையாக இருக்கலாம்.

மற்றவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்கின்ற ஒரு தயக்கமும் எம்முள் இருக்கத்தான் செய்கின்றது. இதனாலே எம்மில் பலர் தமிழில் பேசத் தயங்குகின்றார்கள். தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களையும், தமிழர் உணவுகளையும் பொது இடங்களிலே தவிர்த்து வருகிறார்கள். பிறரின் ஏளனத்திற்கு ஆளாகி விடுவோமோ என்று அஞ்சுகிறார்கள்.

இந்த அறியாமையும் தயக்கமும் எம்மில் இருந்து முழுமையாக அகல வேண்டும். எங்கள் மொழி, மரபுகளின் பின்னணி ஆகியவை பற்றிய சரியான புரிதல் எமக்கு ஏற்பட வேண்டும். அதனால் எம் மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். அப்போது தான் அதன் சிறப்பை மற்றவர்களுக்கு எம்மால் எடுத்துக் கூற முடியும்.

எம்மை யார் இழிவு செய்தாலும், அஞ்சாமல் துணிந்து எதிர் கொள்வோம். தடைகளை உடைத்துத் தன்னம்பிக்கையை வளர்ப்போம்.

நன்றி, வணக்கம்.